




# சக்கர வியூகம்

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 202 15.1.2026 THURSDAY THAI : 1 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 202 15.1.2026 வியாழக்கிழமை தை : 1 விலை : ரூ.5/–







# "எல்லாருக்கும் எல்லாம் என உழைக்கிறோம்"

## பொங்கல் விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேச்சு

சென்னை : ஜன.15-

எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி , சமத்துவ நிலையை அனைவரும் அடைந்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு , திமுக அரசு உழைத்து கொண்டு இருக்கிறது என முதல்வர் ஸ்டாலின் பேசினார்

சென்னை தலைமைச் செயலக ஊழியர்களுடன் பொங்கல் விழாவை முதல்வர் ஸ்டாலின் கொண்டாடினார் . பொங்கல் விழாவில் அவர் பேசியதாவது : அனைவருக்கும் வணக்கம் , தமிழகம் முழுவதும் சமத்துவ பொங்கல் விழாவை கொண்டாடி கொண்டு இருக்கிறோம்

எல்லாருக்கும் எல்லாம் என்ற இலக்கை நோக்கி , சமத்துவ நிலையை அனைவரும் அடைந்து விட வேண்டும் என்ற நோக்கத்தோடு , திமுக அரசு பணியாற்றி கொண்டு இருக்கிறது . நாங்கள் மட்டுமல்ல , நீங்களும் சேர்ந்து தான் உழைத்து கொண்டு இருக்கிறீர்கள்



தமிழக மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக , தலைமை செயலகத்தில் இருந்து நீங்கள் எல்லாம் நேரம் , காலம் பார்க்காமல் உழைத்து கொண்டு இருக்கிறீர்கள் . அப்படிப்பட்ட உங்களுடன் இந்த பொங்கல் விழாவை கொண்டாடுவதில் , நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்

இந்த மகிழ்ச்சி உங்கள் உள்ளங்களிலும் , இல்லங்களிலும் பொங்கட்டும் , பொங்கட்டும் என்று இந்த இனிய தினத்தில் எடுத்து சொல்லி உங்கள் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து கொள்கிறேன் . இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார் .

## பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.15000 ஆக உயர்வு: அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு

சென்னை: ஜன.15-

பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.12,500ல் இருந்து ரூ.15000 ஆக உயர்த்தப்படுவதாகவும், மே மாதத்தில் மட்டும் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார்.



தமிழகத்தில் உள்ள 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களில் உடற்கல்வி 3700 பேர், ஓவியம் 3700 பேர், கணினி அறிவியல் 2 ஆயிரம் பேர், தையல் 1700 பேர், இசை 300, தோட்டக்கலை 20, கட்டிடக்கலை 60, வாழ்க்கைக்கல்வி 200 பேர் பணிபுரிகின்றார்கள்.

இவர்கள், போனஸ், மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, இறத்தோர் குடும்பத்திற்கு நிவாரணம், ஓய்வூதியம் உள்பட அரசின் சலுகைகள் இல்லாமல் பணிபுரிகின்ற தற்காலிக வேலையை நிரந்தரமாக்கவும், தற்போதைய ரூபாய் 12,500 தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை சம்பளமாக வழங்க வலியுறுத்தியும் ஜனவரி 8ம் தேதி முதல் போராட்டத்தை சென்னை பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் நடத்தி வருகின்றார்கள்.

போராட்டக் களத்தில், திமுக தேர்தல் வாக்குறுதி 181ல் சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என அவர்கள் ஓங்கி முழங்கி வந்தனர்.

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.35 ஆயிரம் கோடி, பொங்கல் போனஸ், பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இதை அரசு கொள்கை முடிவாக திமுக தேர்தல் வாக்குறுதி 181 ஐ அரசாணையிட்டு பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து, பொங்கல் போனஸ் வழங்கி முதல்வர் இதனை பொங்கல் பண்டிகை பரிசாக அறிவிக்க வேண்டும்." என்று போராடிய ஆசிரியர்கள் கோரினர்.

இந்நிலையில், நேற்று (ஜன.14) காலை, அமைச்சர் அன்பில் மகேஸ் பகுடிநேர ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முகாம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், "முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் பகுதிநேர ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எஸ்எஸ்ஏ திட்டத்தில் ரூ.3,548 கோடி மத்திய அரசிடம் இருந்து வரவேண்டியுள்ளது. அனால் மத்திய அரசு அதைத் தொடர்ந்து தர மறுக்கிறது. எனினும் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் உறுதுணையாக அரசு இந்த செலவினங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தற்போது ஆசிரியர்களின் போராட்டம் எனக்கு கனத்த இதயத்தைத் தருகிறது என்று முதல்வரிடம் கூறினேன். பொங்கல் பண்டிகை நாளில் மகிழ்ச்சி என்பது வார்த்தையில் மட்டும் இல்லாமல் அவர்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்று விரும்பி அவர்களுக்கான ஊதியம் மேலும் ரூ.2500 உயர்த்தப்படுகிறது.

அதன்படி பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் இனி மே மாதத்தில் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடே இத்தனை காலத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்துக்கு அரசு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். அது குறித்து முதல்வரிடம் பேசியுள்ளேன். மருத்துவக் காப்பீடு தொடர்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்.

அதேபோல், பணி நிரந்தரம் என்பது அவர்களின் பிரதான கோரிக்கை. அது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும்." என்றார்.

## சித்தரேவு, சித்தையங்கோட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் சுய உதவி குழுவினருக்கு நிதி வழங்காவிட்டால் நானே களம் இறங்குவேன்

### அமைச்சர் ஐ.பெரியசாமி அறிவிப்பு

சின்னாளபட்டி, ஜன14

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், சித்தரேவு ஊராட்சிக்குட்பட்ட நல்லாம்பிள்ளையில் ரூ. 32 லட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள பள்ளிக்கூட வகுப்பறைகள் திறப்புவிழா மற்றும் ரூ. 50 லட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ள சமுதாய கூடத்திற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு திண்டுக்கல் கோட்டாட்சியர் திருமலை தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், வட்டாட்சியர் முத்துமுருகன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஒன்றிய பொருளாளர் ராமநாதன் வரவேற்றார். விழாவில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு பேசிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் புதிய பள்ளி வகுப்பறைகளை திறந்துவிட்டு புதிய சமுதாய கூடத்திற்கான பூமி பூஜையில் கலந்து கொண்டு, பணிகளை துவக்கி வைத்தார். அதன் பின்னார் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று தீர்வு வழங்கினார். அப்போது அப்பகுதியைச் சேர்ந்த சுயஉதவிக் குழுவினர் சித்தரேவு மற்றும் சித்தையங்கோட்டையில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் சுயஉதவிக் குழுவினருக்கு நிதி வழங்க தாமதம் செய்வதாகவும், லஞ்சம் கேட்பதாகவும் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களிடம் புகார் செய்தனர். உடனடியாக மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி அவர்களை தொடர்பு கொண்டு, சுயஉதவிக்குழு பெண்களுக்கு உடனடியாக சம்மந்தப்பட்ட வங்கிகள் மூலம் வழங்காவிட்டால் நானே களத்தில் இறங்குவேன் என தெரிவித்தார்.



தொடர்ந்து பேசிய அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் நல்லாம்பிள்ளை கிராமத்திற்கான அனைத்து நலத்திட்டங்களும் உடனடியாக நிறைவேற்றப்படும், பேருந்து வசதியும் செய்து கொடுக்கப்படும் என்றார். அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் அறிவித்தவுடன் 1 மணி நேரத்தில் சம்மந்தப்பட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் சுபாஷினி சம்மந்தப்பட்ட இரு வங்கிகளுக்கும் சென்று சுய உதவிக்குழு பெண்களின் மனுக்களை ஆய்வு செய்து, அவர்களுக்கு நிதி வழங்க ஏற்பாடு செய்திருப்பது குறிப்பிடத் தக்கது. நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், முன்னாள் ஒன்றிய பொறியாளர் முருகபாண்டி, மாவட்ட தகவல்தொழில் நுட்பஅணி ஒருங்கிணைப்பாளர் வாஞ்சிநாதன், சித்தரேவு பெரோஸ்கான், நல்லாம்பிள்ளை கிளைச் செயலாளர் சுந்தர்ரேசன், உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர். நிறைவாக ஊராட்சி செயலர் கண்ணன் நன்றி கூறினார்.

## ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிய 831 செவிலியர்களுக்கு பணி நிரந்தர ஆணை வழங்கினார் அமைச்சர்

சென்னை: ஜன.15-

தமிழகத்தில் உள்ள 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களில் உடற்கல்வி 3700 பேர், ஓவியம் 3700 பேர், கணினி அறிவியல் 2 ஆயிரம் பேர், தையல் 1700 பேர், இசை 300, தோட்டக்கலை 20, கட்டிடக்கலை 60, வாழ்க்கைக்கல்வி 200 பேர் பணிபுரிகின்றார்கள்.

இவர்கள், போனஸ், மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, இறத்தோர் குடும்பத்திற்கு நிவாரணம், ஓய்வூதியம் உள்பட அரசின் சலுகைகள் இல்லாமல் பணிபுரிகின்ற தற்காலிக வேலையை நிரந்தரமாக்கவும், தற்போதைய ரூபாய் 12,500 தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை சம்பளமாக வழங்க வலியுறுத்தியும் ஜனவரி 8ம் தேதி முதல் போராட்டத்தை சென்னை பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் நடத்தி வருகின்றார்கள்.

போராட்டக் களத்தில், திமுக தேர்தல் வாக்குறுதி 181ல் சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என அவர்கள் ஓங்கி முழங்கி வந்தனர்.

"கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.35 ஆயிரம் கோடி, பொங்கல் போனஸ், பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும்.

இதை அரசு கொள்கை முடிவாக திமுக தேர்தல் வாக்குறுதி 181 ஐ அரசாணையிட்டு பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து, பொங்கல் போனஸ் வழங்கி முதல்வர் இதனை பொங்கல் பண்டிகை பரிசாக அறிவிக்க வேண்டும்." என்று போராடிய ஆசிரியர்கள் கோரினர்.

இந்நிலையில், நேற்று (ஜன.14) காலை, அமைச்சர் அன்பில் மகேஸ் பகுடிநேர ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முகாம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், "முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் பகுதிநேர ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

எஸ்எஸ்ஏ திட்டத்தில் ரூ.3,548 கோடி மத்திய அரசிடம் இருந்து வரவேண்டியுள்ளது. அனால் மத்திய அரசு அதைத் தொடர்ந்து தர மறுக்கிறது. எனினும் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் உறுதுணையாக அரசு இந்த செலவினங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தற்போது ஆசிரியர்களின் போராட்டம் எனக்கு கனத்த இதயத்தைத் தருகிறது என்று முதல்வரிடம் கூறினேன். பொங்கல் பண்டிகை நாளில் மகிழ்ச்சி என்பது வார்த்தையில் மட்டும் இல்லாமல் அவர்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்று விரும்பி அவர்களுக்கான ஊதியம் மேலும் ரூ.2500 உயர்த்தப்படுகிறது. அதன்படி பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் இனி மே மாதத்தில் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடே இத்தனை காலத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்துக்கு அரசு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். அது குறித்து முதல்வரிடம் பேசியுள்ளேன். மருத்துவக் காப்பீடு தொடர்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர்.

அதேபோல், பணி நிரந்தரம் என்பது அவர்களின் பிரதான கோரிக்கை. அது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும்." என்றார்.




# தனியார் காற்றாலை டவரை அகற்றக்கோரி மின்கோபுரத்தில் ஏறி போராட்டம்



கயத்தாறு, ஜன.15-

தூத்துக்குடி மாவட்டம் கயத்தாறு தாலுகா வெள்ளாளங்கோட்டை பஞ்சாயத்துக்கு உட்பட்ட சூரியமினிக்கம் கிராமத்திற்கு மேற்கே அமைந்துள்ள குளத்தின் உள்ளே தனியார் காற்றாலை நிறுவனத்துக்கு சொந்தமான 7 மின் கோபுரங்கள் அமைக்கப்பட்டு மின் கம்பிகள் பொருத்தும் பணிகள் நடந்து வருகிறது. கிராமத்துகுளத்தில் மின் கோபுரங்கள் அமைத்தால் விவசாயம் பாதிக்கப்படுவதோடு, கால்நடைகளுக்கு பாதிப்பு ஏற்படும் எனக்கூறி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர். இதையடுத்து நேற்று சம்பந்தப்பட்ட தனியார் நிறுவன ஊழியர்கள் மின் கம்பிகளை பொருத்தும் பணியில் ஈடுபட வந்துள்ளனர். உடனே கிராம மக்கள் திரண்டு வந்து எதிர்ப்பு தெரிவித்தனர். அப்போதுசரவணன் (27) என்பவர் இங்குள்ள மின் கோபுரத்தில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டார். உடனடியாக சில பெண்களும் வேறு ஒரு மின் கோபுரங்களில் ஏறி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதுபற்றி தகவல் அறிந்ததும் அதிகாரிகளும் போலீசாரும் வந்து பேச்சுவார்த்தை நடத்தினர். சுமார் 7 மணி நேரம் நடந்த போராட்டத்திற்கு பிறகு குளத்தில் அமைக்கப்பட்ட 2 சிறிய டவர்கள் அகற்றப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. இதையேற்று கிராம மக்கள் போராட்டத்தை கைவிட்டனர்.

# மாதவரம், மணலி ஏரிகளில் ரூ.24.41 கோடியில் படகுகுழாம்: அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்




மாதவரம், ஜன.15-

மாதவரம், மணலி ஏரிகள் ரூ.24.41 கோடி செலவில் புனரமைத்து, பொழுதுபோக்கிற்காக சுற்றுலா தளமாக மாற்றி படகு குழாம் அமைக்க சென்னை மாநகராட்சி திட்டமிட்டு பணி நடைபெற்று வந்தன. அதன்படி 2 ஏரிகளையும் தூர்வாரி, கரையமைத்து, நடைபாதை, இருக்கைகள், அலங்கார விளக்கள், விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய சிறுவர் பூங்கா, முகப்பு வளைவு, காத்திருப்போர் அறை, உணவகம், பாலூட்டும் அறை என பல்வேறு அம்சங்களுடன் பணிகள் நடைபெற்றது.

மேலும் படகு சவாரி விடும் வகையில் மோட்டார், கால்மிதி படகுகள், ரைடர் படகுகள் கொண்டு வரப்பட்டு மேடை அமைக்கும் பணி நடந்து முடிந்துள்ளது. இந்நிலையில் மாதவரம் மற்றும் மணலி ஏரியை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில், அமைச்சர் கே.என்.நேரு கலந்துகொண்டு 2 ஏரிகளை மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து படகு சவாரியை செய்து துவக்கிவைத்தார். இதையடுத்து 2 ஏரிகள் அருகிலும் பொங்கல் விழா கொண்டாடப்பட்டு, பொதுமக்கள், தூய்மை பணியாளர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்புகளை அமைச்சர் வழங்கினார். இதில், மேயர் பிரியா, மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன், எம்எல்ஏக்கள், சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக செய லாளர் மாதவரம் சுதர்சனம், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர், கலாநிதி வீராசாமி எம்பி, மண்டலக்குழு தலைவர்கள் நந்தகோபால் ஏ.வி.ஆறுமுகம், மண்டல உதவி ஆணையர்கள் தேவேந்திரன், குமாரசாமி, செயற்பொறியாளர் ஆனந்தராவ், கவுன்சிலர் சந்திரன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# பொங்கல் வாழ்த்து கூறிய சிங்கப்பூர் பிரதமர்: லிட்டில் இந்தியாவில் கொண்டாட அழைப்பு






சிங்கப்பூர், ஜன.15-

சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங், தமிழர்களின் பாரம்பரியப் பண்டிகையான பொங்கலை முன்னிட்டு உற்சாகமாக வாழ்த்துத் தெரிவித்துள்ளார். உலக தமிழர்களின் பாரம்பரிய பொங்கல் விழா இன்று போகியுடன் தொடங்கி நாளை சூரியன் பொங்கல், அடுத்த நாள் மாட்டுப் பொங்கல், உழவர் திருநாள், திருவள்ளுவர் தினம், காணும் பொங்கல் என்று கொண்டாட்டங்கள் தொடங்கி உள்ளன. இந்நிலையில், சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வோங் தனது எக்ஸ் தளத்தில் 'பொங்கலோ பொங்கல்!' என்று தமிழில் குறிப்பிட்டு வெளியிட்டுள்ள பதிவில், 'நமது தமிழ் சமூகத்தினரால் கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை, குடும்பத்துடன் ஒன்று கூடி, நன்றி தெரிவித்து, நமது வேர்களைப் போற்றி, நம்பிக்கையான புதிய ஆண்டை வரவேற்கும் நேரமாகும்' என்று நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுள்ளார். அனைவருக்கும் தனது அன்பான வாழ்த்துகளைத் தெரிவித்துள்ள அவர், லிட்டில் இந்தியா அல்லது இந்திய மரபுடைமை இடங்களுக்கு சென்று பொங்கல் பண்டிகை கொண்டாட்டங்களை கண்டு ரசிக்குமாறு பொதுமக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

# தங்கம் விலை பவுனுக்கு ரூ.880 உயர்வு; கிராம் ரூ.300ஐ கடந்து மிரட்டும் வெள்ளி



சென்னை, ஜன.15-

சென்னையில் 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை பவுனுக்கு ரூ.880 அதிகரித்துள்ளது. அதேபோல் வெள்ளியின் விலை ஒரு கிராம் ரூ.300ஐ கடந்து புதிய உச்சம் தொட்டுள்ளது. சர்வதேச பொருளாதாரச் சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில், தங்கத்தின் விலை நிர்ணயிக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களாகவே தங்கம் விலை அதிகரித்துவருகிறது. சில நேரங்களில் விலை குறைந்தாலும், மீண்டும உயர்ந்து விடுகிறது. அந்தவகையில் இன்றும் தங்கம் விலை அதிரடியாக உயர்ந்துள்ளது. அதன்படி, 22 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.110 உயர்ந்து ஒரு கிராம் ரூ.13,280க்கும், பவுனுக்கு ரூ.880 உயர்ந்து ஒரு பவுன் ரூ.1,06,240க்கும் விற்பனை செய்யப்படுகிறது. அதே போல 18 காரட் தங்கம் விலை கிராமுக்கு ரூ.100 உயர்ந்து ஒரு கிராம் ரூ.11.080க்கும், பவுனுக்கு ரூ.8000 உயர்ந்து ஒரு சவரன் ரூ.88,640க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

மிரட்டும் வெள்ளி! வெள்ளி விலை ஒரே நாளில் கிராமுக்கு ரூ.15 உயர்ந்து புதிய உச்சமாக ஒரு கிராம் ரூ.307க்கும், கிலோவுக்கு ரூ.15,000 உயர்ந்து ஒரு கிலோ ரூ.3,07,000க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# இந்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியே தமிழ் கலாச்சாரம் பொங்கல் விழாவில் பிரதமர் மோடி உரை



புதுடெல்லி, ஜன.15-

"தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய கலாச்சாரத்துடன் இணைந்தது" என்று டெல்லியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் பிரதமர் மோடி தெரிவித்தார். மத்திய இணை அமைச்சர் எல்.முருகனின் டெல்லி வீட்டில் இன்று பொங்கல் விழா கொண்டாடப்பட்டது. இதில், பிரதமர் மோடி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார். தமிழகத்தின் பாரம்பரிய முறைப்படி, பானையில் பொங்கல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டது. பானையில் பால் ஊற்றி பிரதமர் மோடி வழிபட்டார். இதனையடுத்து, மாடுகளுக்கு மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, உணவளித்த பிரதமர், கால்நடைகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்த கொண்டாட்டத்தில், எல்.முருகன் மற்றும் அவரது குடும்பத்தினரும், பாஜக அமைப்புச் செயலாளர் பி.எல்.சந்தோஷ், தமிழக பாஜக முன்னாள் தலைவர்கள் தமிழிசை சவுந்தரராஜன், அண்ணாமலை, பாஜக தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

மேலும், இந்த நிகழ்வில் அண்மையில் வெளியான 'பராசக்தி' படத்தில் நடித்த நடிகர்கள் சிவகார்த்திகேயன், ரவி மோகன், அப்படத்தின் இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழாவில் பேசிய பிரதமர் மோடி,"தமிழ் கலாச்சாரம் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரியதல்ல. அது இந்திய தேசத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். உண்மையில் அது முழு மனிதகுலத்தின் பகிரப்பட்ட பாரம்பரியம். ஒரே பாரதம்; உன்னத பாரதம் என்ற உணர்வை மேலும் வலுப்படுத்தக் கூடியதாக பொங்கல் போன்ற பண்டிகைகள் உள்ளன.

பொங்கல் இன்று உலகளாவிய பண்டிகையாக மாறியுள்ளது. உலகம் முழுவதிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தினரும், தமிழ் கலாச்சாரத்தைப் போற்றுபவர்களும் இதை மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடுகிறார்கள். நானும் அவர்களில் ஒருவன். இந்த சிறப்புமிக்க பண்டிகையை உங்கள் அனைவருடனும் கொண்டாடுவதை நான் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நமது வாழ்வில் பொங்கல் ஒரு இனிமையான அனுபவம் போன்றது. இது நமக்கு உணவை வழங்கும் விவசாயிகளின் கடின உழைப்பை பிரதிபலிக்கிறது, பூமிக்கும் சூரியனுக்கும் நன்றி தெரிவிக்கிறது. அதேநேரத்தில், இந்த திருவிழா இயற்கை, குடும்பம், சமூகம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்கான வழியை நமக்குக் காட்டுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் லோஹ்ரி, மகர சங்கராந்தி, மாக் பிஹு போன்ற பண்டிகைகளாலும் தற்போது நாட்டில் உற்சாகம் நிலவுகிறது. பொங்கல் பண்டிகையை முன்னிட்டு இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் வாழும் அனைத்து தமிழ் சகோதர சகோதரிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்." என தெரிவித்தார்.

இவ்விழாவில், நாட்டியம், இசை உள்ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

# சென்னை விமானநிலையத்தில் புகைமூட்டம்; 14 விமானங்கள் ரத்து, 30 விமானங்கள் தாமதம்



File Photo

மீனம்பாக்கம், ஜன.15-

சென்னை விமானநிலைய சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று போகி பண்டிகையை முன்னிட்டு கடும் புகைமூட்டத்துடன் பனி நிலவியது. இதன் காரணமாக, சென்னை விமானநிலையத்தில் விமான சேவைகளில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதையடுத்து, சென்னை விமான நிலையத்தில் இன்று காலை 7 மணி வரை வருகை, புறப்பாடு என மொத்தம் 8 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு இருந்தன. தற்போது கொச்சி, பெங்களூர், மும்பைக்கு 3 புறப்பாடு விமானங்கள், அதேபோல் கொச்சி, பெங்களூர், மும்பையில் இருந்து 3 விமானங்களின் வருகை என மொத்தம் 6 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. இதையடுத்து, சென்னை விமானநிலையத்தில் இதுவரை வருகை, புறப்பாடு என மொத்தம் 14 விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. இதேபோல், சென்னை விமானநிலையத்தில் இன்று காலை 7 மணிவரை 10 விமானங்களின் புறப்பாடு ஒரு மணி முதல் 3 மணி நேரம்வரை தாமதமானது. இதைத் தொடர்ந்து, தற்போது பெங்களூர், திருவனந்தபுரம், ஐதராபாத், அகமதாபாத், கொழும்பு, புனே, கொல்கத்தா உள்பட 20 விமானங்களின் வருகை, அந்தமான், பெங்களூர், மும்பை, கோவை, திருவனந்தபுரம், ஐதராபாத், புனே, சிலிகுரி உள்பட 10 விமானங்களின் புறப்பாடு என மொத்தம் 30 விமானங்கள் கடும் பனியுடன் கூடிய புகைமூட்டம் காரணமாக, சுமார் 3 மணி நேரங்களுக்கு மேல் தாமதமாகியுள்ளன. இதையடுத்து, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் போகி பண்டிகையை முன்னிட்டு இன்று அதிகாலை முதல் கடும் பனியுடன் கூடிய புகைமூட்டத்தினால், சென்னை விமான நிலையத்தில் இதுவரை மொத்தம் 30 விமானங்கள் தாமதத்துடன், 14 விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இதில், சென்னை விமான நிலையத்தில் நடப்பாண்டு போகி பண்டிகை புகைமூட்டம் மற்றும் பனிமூட்டம் காரணமாக மொத்தம் 44 விமான சேவைகள் பாதிக்கப்பட்டு உள்ளன. இதன் எண்ணிக்கை, கடந்தாண்டைவிட அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



# பொங்கல் பண்டிகை: அதிகக் கட்டணம் வசூலித்த 30 ஆம்னி பேருந்துகள் மீது நடவடிக்கை

சென்னை, ஜன.15-

பொங்கல் பண்டிகையையொட்டி அதிகக் கட்டணம் வசூலித்த 30 ஆம்னி பேருந்துகள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் சாலை பாதுகாப்பு ஆணையரகம் தகவல் தெரிவித்துள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில், பொங்கல் பண்டிகை மற்றும் தொடர் விடுமுறையை முன்னிட்டு (12.01.2026 முதல் 18.01.2026 வரை) பொதுமக்கள் வெளியூர் பயணம் மேற்கொள்வதைப் பயன்படுத்தி தனியார் ஆம்னி பேருந்து உரிமையாளர்கள் அதிகப்படியான கட்டணம் வசூல் செய்யும் நடவடிக்கையை தடுக்கும் பொருட்டு. வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்.

மோட்டார் வாகன ஆய்வாளர்கள் மற்றும் போக்குவரத்து சோதனைச் சாவடி ஆய்வாளர்கள் ஆகியோரைக் கொண்டு தமிழகம் முழுவதும் 45 சிறப்புக்குழுக்கள் அமைக்கப்பட்டு 13.01.2026 வரை 3337 ஆம்னி பேருந்துகள் தணிக்கை செய்யப்பட்டு 547 சோதனை அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட தணிக்கையின்போது இணக்ககட்டணம் ரூ.2,46,000 மற்றும் வரியாக ரூ.41,77,362 வசூலிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சிறப்பு தணிக்கையில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்பட்ட 30 ஆம்னி பேருந்துகளுக்கு தணிக்கை அறிக்கைகள் வழங்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அதிகக் கட்டணம் வசூலிக்கப்படும் ஆம்னி பேருந்துகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு, பயணிகள் எந்தவித சிரமமின்றி அவர்களது சொந்த ஊர்களுக்கு சென்றடைய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரப்பெறுகின்றது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.15000 ஆக உயர்வு: அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவிப்பு



சென்னை, ஜன.15-

பகுதிநேர ஆசிரியர்கள் ஊதியம் ரூ.12,500ல் இருந்து ரூ.15000 ஆக உயர்த்தப்படுவதாகவும், மே மாதத்தில் மட்டும் ரூ.10 ஆயிரம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அன்பில் மகேஸ் அறிவித்துள்ளார். தமிழகத்தில் உள்ள 12 ஆயிரம் பகுதிநேர ஆசிரியர்களில் உடற்கல்வி 3700 பேர், ஓவியம் 3700 பேர், கணினி அறிவியல் 2 ஆயிரம் பேர், தையல் 1700 பேர், இசை 300, தோட்டக்கலை 20, கட்டிடக்கலை 60, வாழ்க்கைக்கல்வி 200 பேர் பணிபுரிகின்றார்கள். இவர்கள், போனஸ், மருத்துவக் காப்பீடு, வருங்கால வைப்பு நிதி, இறந்தோர் குடும்பத்திற்கு நிவாரணம், ஓய்வூதியம் உள்பட அரசின் சலுகைகள் இல்லாமல் பணிபுரிகின்ற தற்காலிக வேலையை நிரந்தரமாக்கவும், தற்போதைய ரூபாய் 12,500 தொகுப்பூதியத்தை மாற்றி காலமுறை சம்பளமாக வழங்க வலியுறுத்தியும் ஜனவரி 8ம் தேதி முதல் போராட்டத்தை சென்னை பள்ளிக்கல்வித்துறை வளாகத்தில் நடத்தி வருகின்றார்கள். போராட்டக் களத்தில், திமுக தேர்தல் வாக்குறுதி 181ல் சொன்னபடி முதல்வர் ஸ்டாலின் பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என அவர்கள் ஓங்கி முழங்கி வந்தனர். "கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்திற்கு ரூ.35 ஆயிரம் கோடி, பொங்கல் போனஸ், பொங்கல் பரிசி வழங்க ரூ.7 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கிய முதல்வர் சுமார் ரூ.300 கோடி நிதி ஒதுக்கி பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். இதை அரசு கொள்கை முடிவாக திமுக தேர்தல் வாக்குறுதி 181 ஐ அரசாணையிட்டு பகுதிநேர ஆசிரியர்களை பணி நிரந்தரம் செய்து, பொங்கல் போனஸ் வழங்கி முதல்வர் இதனை பொங்கல் பண்டிகை பரிசாக அறிவிக்க வேண்டும்." என்று போராடிய ஆசிரியர்கள் கோரினர். இந்நிலையில், காலை, அமைச்சர் அன்பில் மகேஸ் பகுடிநேர ஆசிரியர்கள் சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் முகாம் அலுவலகத்தில் காலை 11 மணியளவில் இந்த பேச்சுவார்த்தை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர், "முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் பகுதிநேர ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. எஸ்எஸ்ஏ திட்டத்தில் ரூ.3,548 கோடி மத்திய அரசிடம் இருந்து வரவேண்டியுள்ளது. அனால் மத்திய அரசு அதைத் தொடர்ந்து தர மறுக்கிறது. எனினும் ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் உறுதுணையாக அரசு இந்த செலவினங்களை ஏற்றுக் கொண்டு செயல்படுத்தி வருகிறது. தற்போது ஆசிரியர்களின் போராட்டம் எனக்கு கனத்த இதயத்தைத் தருகிறது என்று முதல்வரிடம் கூறினேன். பொங்கல் பண்டிகை நாளில் மகிழ்ச்சி என்பது வார்த்தையில் மட்டும் இல்லாமல் அவர்களுக்கு உண்மையாகவே மகிழ்ச்சி இருக்க வேண்டும் என்று விரும்பி அவர்களுக்கான ஊதியம் மேலும் ரூ.2500 உயர்த்தப்படுகிறது. அதன்படி பகுதிநேர ஆசிரியர்களின் ஊதியம் ரூ.15 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது. மேலும் மே மாதத்தில் அவர்களுக்கு ஊதியம் வழங்கப்படாத நிலையில் இனி மே மாதத்தில் ரூ.10 ஆயிரம் ஊதியமாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தின் ஊடே இத்தனை காலத்தில் சுமார் 200 பேர் உயிரிழந்துள்ளனர். அவர்களின் குடும்பத்துக்கு அரசு ஏதேனும் நிவாரணம் செய்ய வேண்டும் என்று கோரியுள்ளனர். அது குறித்து முதல்வரிடம் பேசியுள்ளேன். மருத்துவக் காப்பீடு தொடர்பாகவும் கோரிக்கை வைத்துள்ளனர். அதேபோல், பணி நிரந்தரம் என்பது அவர்களின் பிரதான கோரிக்கை. அது தொடர்பாக அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்படும்." என்றார்.

# பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பானை, கோலப்பொடி விற்பனை விறுவிறுப்பு

பொள்ளாச்சி, ஜன.15-

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, பொள்ளாச்சி பகுதிகளில் பொங்கல் பானை விற்பனை விறுவிறுப்பாக நடக்கிறது. பொள்ளாச்சி சுற்றுவட்டார கிராமங்களாக ஆர்.பொன்னாபுரம், முத்தூர், வடக்கிபாளையம், கோட்டூர், ஒடையக்குளம், அம்பராம்பாளையம், சமத்தூர், அங்கலக்குறிச்சி மற்றும் கிணத்துக்கடவு சுற்றுவட்டாரத்தில் சிங்கராம்பாளையம், பகவதிபாளையம் உள்ளிட்ட பல கிராமங்களில், இந்த ஆண்டு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு மண்பாண்ட தொழிலாளர்கள் இரண்டு மாதத்திற்கு முன்பே பானை தயாரிப்பில் முழுவீச்சில் ஈடுபட்டனர். ஆனால், அடிக்கடி மழையால் சரியான நேரத்தில் உலர வைக்க முடியாததால், அதன் உற்பத்தி குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. இருப்பினும், களிமண்ணால் செய்யப்படும் பானைக்கு நல்ல வரவேற்பு இருப்பதால், பலர்



ஆர்டர் கொடுத்து வாங்கிச்செல்கின்றனர். சிறியது முதல் பெரிய அளவிலான பானை தயாராகி, விற்பனைக்காக மார்க்கெட்டுகளுக்கு வரப்பெற்றுள்ளது. நாளை (15ம் தேதி) பொங்கல் பண்டிகை என்பதால், பொள்ளாச்சி மார்க்கெட் பகுதி மற்றும் நகரில் உள்ள பல வீடுகளில் விற்பனைக்காக அடுக்கி வைத்துள்ளனர். அதனை, நகர் மற்றும் கிராம பகுதியை சேர்ந்த பலரும் நேரில் வந்து வாங்கி செல்கின்றனர். ஒரு பானை ரூ.100 முதல் ரூ.500 வரை விற்பனையாவதாக, தொழிலாளர்கள் தெரிவித்தனர். அதுபோல, நகரில் கடைவீதி, மார்க்கெட் பகுதி மற்றும் வெங்கடேசா காலனி, மகாலிங்கபுரம், கோவை ரோடு, பஸ் நிலைய பகுதி, பாலக்காடு ரோடு, கடைவீதி உள்ளிட்ட பல இடங்களில் வண்ண வண்ண கோலப்பொடிகள் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ளது. அதனையும் நகரம் மற்றும் கிராம பகுதியினர் தங்கள் விருப்பத்திற்கேற்ப உரிய விலை கொடுத்து வாங்கிச்சென்றனர்.

# ஊர்க்காவல் படையில் முதல் முறையாக திருநங்கைகள், திருநம்பிகள் சேர்ப்பு கோவையில் நெகிழ்ச்சி

கோவை, ஜன.15-

கோவை ஊர்க்காவல் படையில் முதல் முறையாக சேர்க்கப்பட்டதால் திருநங்கைகள், திருநம்பிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சமூக நலத்துறையின் கீழ் திருநங்கைகளுக்கு ஊர்க்காவல் படையில் பணி வழங்கப்படும் என கடந்த 202526ம் ஆண்டு பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. நேற்று முன்தினம் சென்னை தலைமை செயலகத்தில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் நியமன ஆணைகளை வழங்கினார். அதன்படி சென்னை, தாம்பரம், ஆவடி, திருச்சி மற்றும் கோவை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தின் கீழ், 50 திருநங்கைகள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

கோவையில் 7 திருநங்கைகள், திருநம்பிகள் பணியில்



சேர்ந்தனர். இதையடுத்து கோவை மாநகர காவல் ஆணையர் கண்ணன், தேர்ந்தெடுக்கப்பட்ட 7 பேருக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கினார். இது தொடர்பாக தேர்வு செய்யப்பட்டவர்கள் கூறும்போது, "வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில் அவமானங்களை இதுவரை சந்தித்துள்ளோம். சக மனிதர்களாகக் கூட சமூகத்தில் நாங்கள் மதிக்கப்படாத நிலையில், இன்றைக்கு அரசு ஊர்க்காவல் படையில் பணி செய்ய வாய்ப்பு தந்து எங்களை கைதூக்கிவிட்டுள்ளது. இந்த நிலையில் இருந்து மக்களுக்கு சிறப்பாக சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணம் எங்களுக்கு இருக்கிறது. எங்களை போன்று வாழும் பிறருக்கும், இந்த வாய்ப்பு சாதிப்பதற்கு ஒரு வழிகாட்டியாகவே இருக்கும்" என்று அவர்கள் நெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். திருநங்கைகள், திருநம்பிகள் உரிமைகளுக்காக தொடர்ந்து போராடும் சென்னையை சேர்ந்த நிறங்கள் அறக்கட்டளை அமைப்பின் இணை நிறுவனர் டி.டி.சிவக்குமார் கூறும்போது, "ஊர்க்காவல் படையில் அரசு தந்திருக்கும் அங்கீகாரம் சமூகத்தில் மிகவும் முக்கியமானது. தனியார் நிறுவனங்கள் நூற்றுக்கணக்கில் வேலைவாய்ப்புகளை அளித்தால், அரசின் அங்கீகாரம் ஒரு சமூக மதிப்பாக இன்றைக்கு உள்ளது. இன்றைக்கு எங்களுக்கு ஊர்க்காவல் படையில் தந்திருக்கும் வாய்ப்பை, முழுமனதார வரவேற்கிறோம். ஏற்கனவே தமிழ்நாட்டில் அரசுப்பணி, காவல்துறையில் திருநங்கைகள், திருநம்பிகள் பணியாற்றுகிறார்கள். சிலர் வெளிப்படையாக சொல்வார்கள். பலர் வெளிப்படையாக சொல்லமாட்டார்கள். வேலையில் வேறு ஏதேனும் சட்டசிக்கல்கள் வந்துவிடுமோ என்ற அச்சம் மேலோங்கி இருந்தது. இன்றைக்கு அரசே அங்கீகரித்திருப்பது, இதுபோன்று பணியாற்றும் பலரையும் தைரியமாக இயங்க வைக்கும். அதேபோல் இனிவரும் இளம் திருநங்கைகள், திருநம்பிகளுக்கும் இந்த வாய்ப்புகள் அவர்களுக்கான பிரகாசமான ஒரு சமூக அங்கீகாரமாகவே இருக்கும் என நாங்கள் கருதுகிறோம்" என்று அவர் தெரிவித்தார்.

# குடிநீரில் கழிவுநீர் கலந்து 23 பேர் பலி; ஒன்றியம், மாநிலம், மாநகராட்சியில் பாஜக ஆட்சியில் இருந்து என்ன பயன்?

## சொந்தக் கட்சியை விளாசிய சுமித்ரா மகாஜன்

இந்தூர், ஜன.15-

இந்தூரில் அசுத்தமான குடிநீரால் உயிரிழப்பு ஏற்பட்ட சம்பவத்திற்கு, பாஜக மூத்த தலைவர் சுமித்ரா மகாஜன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மத்திய பிரதேச மாநிலம், இந்தூர் நகரில் உள்ள பகீரத்புரா பகுதியில், 120 ஆண்டுகள் பழமையான குடிநீர் குழாயில் உடைப்பு ஏற்பட்டு கழிவுநீர் கலந்த விவகாரத்தில் வாந்தி, பேதி ஏற்பட்டு 1,400க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட நிலையில், 400 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அரசு தரப்பில் 8 பேர் பலியானதாகக் கூறப்பட்டாலும், 17 முதல் 23 பேர் வரை உயிரிழந்ததாக எதிர்க்கட்சிகள் மற்றும் பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இது தொடர்பாக அலட்சியமாக செயல்பட்ட 2 அதிகாரிகள் சஸ்பெண்ட்



செய்யப்பட்டுள்ளதுடன், மாநகராட்சி ஆணையரும் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளார். விசாரணையில் பொதுக் கழிப்பறைக்கு அடியில் செப்டிக் டேங்க் இல்லாமல் இருந்ததால், கழிவுநீர் குடிநீருடன் கலந்ததாக தெரியவந்துள்ளது. இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக மக்களவை முன்னாள் சபாநாயகரும், பாஜக மூத்த தலைவருமான சுமித்ரா மகாஜன் ஆளுங்கட்சிக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் கூறுகையில், 'இந்தூர் நகரை பாஜக வளர்த்தெடுத்தது. ஆனால் தற்போது மாநகராட்சி, மாநிலம் மற்றும் ஒன்றிய அரசு என மூன்றிலும் பாஜக ஆட்சியில் இருக்கும்போது இதுபோன்ற அலட்சியம் நடப்பது வேதனையளிக்கிறது. இந்தச் சம்பவம் பாஜகவினருக்கு ஒரு விழிப்புணர்வு அழைப்பாகும். நாம் சுயபரிசோதனை செய்து கொள்ள வேண்டும். அடிப்படை உள்கட்டமைப்பை மேம்படுத்தாமல் வளர்ச்சியை மட்டும் பேசக்கூடாது' என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அதேநேரம் பாஜக எம்பி ஞானேஷ்வர் பாட்டீல், இந்தூர் மக்கள் மீதே பழிபோடும் வகையில் பேசியது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.



# சமயநல்லூர் நகரி பகுதியில் "அதிமுக எடப்பாடி கிச்சன்" தலைப்பில் பாதயாத்திரை குழுவினருக்கு அன்னதானம்

சமயநல்லூர்.ஜன .15-

மதுரை மாவட்டம் சமயநல்லூர் அருகே உள்ள நகரி பகுதியில் அதிமுக எடப்பாடி கிச்சன் என்னும் தலைப்பில் பழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்கள் மற்றும் பொதுமக்களுக்கு அன்னதானத்தினை சட்டமன்ற எதிர்க்கட்சி துணை தலைவரும் திருமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.பி. உதயகுமார் வழங்கி தொடங்கி வைத்தார். தொடர்ந்து பேசிய அவர் கடந்த கால அதிமுக ஆட்சியில் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட திட்டமான அம்மா கிச்சன் ஏழை எளிய மக்களுக்கு பயனுள்ளதாக இருந்து வந்தது அதனை இந்த அரசு முடக்கிவிட்டது உழைக்கும்தொழிலாளர் வயிற்றில் அடித்து வருகிறது வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற்று அதிமுக ஆட்சி அமையும் எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் முதலமைச்சராக அரியணை அமருவார் என்று தெரிவித்தார்.. இதில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர்கள் வாடிப்பட்டி ராஜேஷ்கண்ணா, வெற்றிவேல், வக்கீல் திருப்பதி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கருப்பையா, தமிழரசன், மகேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் ரவிச்சந்திரன், அரியூர் ராதாகிருஷ்ணன், காளிதாஸ்,திருமங்கலம் ராமகிருஷ்ணன்,மாவட்ட விவசாய அணி ஆர்.பி.குமார், மாவட்ட பிரதிநிதி முரளி, அம்மா பேரவை துணைச் செயலாளர் மனோகரன், தகவல் தொழில்நுட்ப அணி ஆனந்த், இளைஞரணி மணிமாறன், பாலன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



# வானிலை: மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் மிதமான மழை வாய்ப்பு

சென்னை, ஜன.15-

கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்றும், நாளையும் (ஜன.14, 15) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: தென் தமிழத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமாக இருந்தது. தென் தமிழகத்தில் அநேக இடங்களிலும், வடதமிழகத்தில் ஒருசில இடங்களிலும் செவ்வாய்க்கிழமை மழை பெய்துள்ளது. புதன்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக திருநெல்வேலி மாவட்டம் ஊத்துவில் 9 செ.மீ., நாலுமுக்கு, காக்காச்சியில் தலா 7 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. கிழக்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் புதன்கிழமை, வியாழக்கிழமை (ஜன.14 மற்றும் 15) லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஏனைய தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் வறண்ட வானிலை நிலவக்கூடும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.


சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில், புதன்கிழமை, வியாழக்கிழமை (ஜன.14 மற்றும் 15) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகாலை வேளையில் ஓரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும். இவ்வாறு அதில் அவர் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# எதிர்கட்சிகள் கடுமையாக விமர்சிக்கும் நிலையில் 100 நாள் வேலை திட்டம் 'ஊழலின் கடல்'

## ஒன்றிய அமைச்சர் சர்ச்சை கருத்து

அகமதாபாத், ஜன.15-

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மிகப்பெரிய ஊழல் கடலாக மாறி விட்டதாகவும், அதனால் புதிய சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் ஒன்றிய விவசாயத் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் தெரிவித்துள்ளார். குஜராத் மாநிலம், அகமதாபாத் வந்திருந்த ஒன்றிய அமைச்சர் சிவராஜ் சிங் சவுகான், செய்தியாளர்களிடம் பேசுகையில் பழைய வேலை உறுதித் திட்டத்தைக் கடுமையாகச் சாடினார். அவர் கூறுகையில், '100 நாள் வேலை திட்டம் என்பது கொள்ளையடிப்பதற்கான ஒரு உத்தரவாதமாக மாறி விட்டது. மனிதர்களுக்குப் பதிலாக இயந்திரங்களை வைத்தும், ஒப்பந்ததாரர்கள் மூலமாகவும் பணிகள் நடைபெற்றுள்ளன. கிராமசபை தணிக்கையில்



மட்டும், இறந்தவர்கள் மற்றும் முதியோர்களின் பெயர்களைப் பயன்படுத்தி முறைகேடு செய்ததாக 10 லட்சத்து 51 ஆயிரம் புகார்கள் வந்துள்ளன. அரசின் நிதியை வீணடித்தது மட்டுமின்றி, தொழிலாளர்களுக்குச் சம்பளம் கிடைப்பதிலும் தாமதம் ஏற்பட்டது. அதனால் பழைய சட்டத்தை நீக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இந்த சட்டத்திற்கு மாற்றாகக் கொண்டுவரப்பட்டுள்ள 'விக்சித் பாரத்' சட்டத்தின் கீழ், வேலை நாட்கள் 100 லிருந்து 125 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது. வேலை வழங்கப்படாவிட்டால் வேலையில்லா திண்டாட்ட உதவித்தொகை மற்றும் சம்பளத் தாமதத்திற்கு இழப்பீடு வழங்கும் பிரிவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. செயற்கைக்கோள் வரைபடம் மூலம் பணிகள் கண்காணிக்கப்படும். இமயமலை மற்றும் வடகிழக்கு மாநிலங்களைத் தவிர்த்துப் பிற மாநிலங்களில் ஒன்றிய மற்றும் மாநில அரசுகள் 60:40 என்ற விகிதத்தில் நிதியைப் பகிர்ந்து கொள்ளும்' என்றார். 100 நாள் திட்டத்தில் மகாத்மா காந்தியின் பெயரை நீக்கியுள்ளதாகக் காங் கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்தி வரும் நிலையில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மிகப்பெரிய ஊழல் கடலாக மாறிவிட்டதாக அமைச்சர் கூறியிருப்பது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

# "அண்ணாமலையை ராஜ் தாக்கரே அவமதிப்பதை அனுமதிக்க முடியாது" சீமான் கொந்தளிப்பு

சென்னை, ஜன.15-

"அண்ணாமலை குறித்த ராஜ் தாக்கரேவின் வன்முறை பேச்சுக்கள் வன்மையாக கண்டிக்கத்தக்கது. அண்ணாமலை தனி நபரல்ல; முதலில் அவர் தமிழ்த் தேசிய இனத்தின் மகன்" என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

"மண்ணின் மைந்தர்களே மண்ணை ஆள வேண்டும்" என்பதே ஒவ்வொரு தேசிய இனத்தின் இறையாண்மை கொள்கை. ஒவ்வொரு மாநிலத்தின் முதன்மையான உரிமை. அம்முழக்கங்களை முன்வைத்து மராட்டிய மாநில உரிமைக்காக சிவசேனா போராடுவது 100 விழுக்காடு சரியானதே. அதேபோன்று மராத்திய மாநிலத்தில் இந்தி திணிப்புக்கு எதிராக போரிடும் சிவசேனா கட்சியின், தாய்மொழி





கொள்கையும் 100 விழுக்காடு சரியானதே. தேசிய இனங்களின் உரிமைக்காக போராடும் அனைத்து தேசிய இன மக்களின் கருத்தோடும் உடன்படுகின்றோம். தேசிய இனங்களின் உரிமை மீட்புக்கான போராட்டத்தில் மராத்திய மாநில உரிமைக்காக குரல் கொடுக்கவும், துணை நிற்கவும் தயாராக உள்ளோம். ஆனால், மும்பை மாநகராட்சி தேர்தல் பரப்புரையின்போது, அம்மண்ணில் நின்று தமிழ்நாடு பாஜகவின் முன்னாள் தலைவர் அண்ணாமலை, 'மும்பை மராத்தியர்களின் நகரம் அல்ல, பன்னாட்டு நகரம்' என்று பேசியது அவருடைய தனிப்பட்ட கருத்தாகும்; அதை ஏற்பதும், எதிர்ப்பதும் அவரவரின் ஜனநாயக உரிமை. ஆனால், மும்பைக்கு வந்தால் அண்ணாமலையின் கால்களை வெட்டுவேன் என்பதெல்லாம் கடும் கண்டனத்திற்குரியது. அண்ணாமலையின் கருத்தியல், கோட்பாடு அரசியல் நிலைப்பாட்டில் நாங்கள் முற்றிலும் முரண்படுகிறோம். அதற்கு நேர் எதிரான, அரசியலை நாங்கள் முன்னெடுக்கிறோம். இருப்பினும், அண்ணாமலையின் கருத்தை கருத்தால் எதிர்கொள்வதற்கு பதிலாக, அண்ணாமலை மும்பையில் கால்வைத்தால் வெட்டுவேன் எனும் கொடும்போக்கு ஒருபோதும் ஏற்புடையதல்ல. அண்ணாமலை ஒரு தனி நபர், ஒரு கட்சியைச் சேர்ந்தவர், குறிப்பிட்ட கொள்கையை ஏற்றவர் என்பதை மட்டும் கருத்தில்கொண்டு பேசுவது ஏற்புடையதல்ல; ராஜ் தாக்கரேவின் வன்முறை பேச்சு அண்ணாமலை என்ற தனியொருவரை மட்டும் அவமதிப்பதல்ல; ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் அவமதிப்பதாகும்; அதனை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. மக்களை வழிநடத்தும் மதிப்புமிக்கத் தலைவர் பெருமக்கள் வன்முறையை தூண்டும் வகையில் பேசுவது சரியானதல்ல. கடந்த காலங்களில் ஆந்திர காட்டில் 20 தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் கேட்க நாதியில்லை; நடுக்கடலில் மீனவர் கள் தமிழர்கள் என்பதால் சுட் டு க் கொல்லப்பட்ட போதும் கேட்க நாதியில்லை; அப்படி ஒரு நிலை தமிழ் மண்ணில் இன்று இல்லை. அண்ணாமலை தனி நபரல்ல; முதலில் அவர் தமிழ்த் தேசிய இனத்தின் மகன். அண்ணாமலைக்கு கட்சி, அரசியல், கொள்கை, கோட்பாடு அனைத்தையும் கடந்து தமிழ் இனத்தின் மகனாக நாங்கள் துணை நிற்போம். தம்பி அண்ணாமலை குறித்த ராஜ் தாக்கரேவின் வன்முறை பேச்சுகள் வன்மையாக கண்டிக்கத்தக்கது' என்று சீமான் தெரிவித்துள்ளார்.

# உவரி அருகே பெண்ணிடம் தங்கச்சங்கிலியை பறித்த கொள்ளையர்கள் 3 பேர் அதிரடி கைது : 60 கி.மீ தூர CCTV ஆய்வுக்கு பின் போலீசில் சிக்கினர்



திசையன்விளை ஜன.15-

திருநெல்வேலி மாவட்டம் உவரி அருகே காரி கோவில் என்ற கிராமத்தில் ஆடு மேய்த்துக் கொண்டிருந்த பெண்ணிடம், இருசக்கர வாகனத்தில் வந்த மூவர் 3 சவரன் தங்கச் சங்கிலியைப் பறித்துச் சென்றனர். இது தொடர்பாக நெல்லை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டாக்டர் வி. பிரசன்ன குமார் உத்தரவின்பேரில் தனிப்படை அமைக்கப்பட்டது. இதில் காவல்துறையினர் சுமார் 60 கிலோமீட்டர் தூரத்திற்கு இருந்த சிசிடிவி (CCTV) காட்சிகளைத் தீவிரமாக ஆய்வு செய்து கொள்ளையர்களை அடையாளம் கண்டனர். விசாரணையில், தூத்துக்குடியைச் சேர்ந்த பார்வதி முத்து (26), சரவணன் (36) மற்றும் முத்து ரமேஷ் (37) ஆகியோர் இக்குற்றத்தில் ஈடுபட்டது தெரியவந்தது. இவர்கள் மீது பணகுடியில் ஆயுதத்தைக் காட்டி மிரட்டிய வழக்கும் இருந்ததால், பணகுடி மற்றும் உவரி காவல்துறையினர் இணைந்து இவர்களைக் கைது செய்தனர். கைதானவர்களிடம் இருந்து பணம் மற்றும் தங்க நகை மீட்கப்பட்டது. குற்றவாளிகள் தற்போது சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

சிறப்பாகச் செயல்பட்ட வள்ளியூர் உட்கோட்டத் துணை காவல் கண்காணிப்பாளர் வெங்கடேஷ் மற்றும் குழுவினரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பாராட்டினார்.



# தென்காசி யுஎஸ்பி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா

தென்காசி : ஜன 15-

தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சியில் இயங்கி வரும் யுஎஸ்பி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், சமத்துவ பொங்கல் விழா வெகு சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் அனைத்து மாணவ மாணவிகளும் நமது பாரம்பரிய உடைகளான வேஷ்டி, சட்டை,சேலை, பட்டுப்பாவாடை, தாவணி அணிந்து வந்திருந்தனர். ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் தனித்தனியாக அடுப்பு வைத்து பொங்கலிட்டனர். இவ்விழாவில் பள்ளியின் தாளாளர் செல்வராஜ், செயலாளர் சகாய செல்வமேரி ஆகியோர் தலைமை தாங்கினார்கள். பள்ளி முதல்வர் அந்தோணி பால்ராஜ் அனைவரையும் வரவேற்று பேசி பொங்கல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். மாணவர்கள் அனைவரும் பொங்கலோ பொங்கல் என்று கூவி குலவையிட்டு, தங்களது மகிழ்ச்சியினை ஒருவருக்கு ஒருவர் பகிர்ந்து கொண்டது புது அனுபவமாக இருந்தது என்றும் தங்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது என்றும் பெருமையுடன் கூறினார்கள். விழாவின் இறுதியில் அனைத்து மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இனிப்பு பொங்கல் வழங்கப்பட்டது. இவ்விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மிகச் சிறப்பாக செய்திருந்த நிர்வாகம் பள்ளி முதல்வர் மற்றும் ஆசிரியர்களை மாணவர்களும் பெற்றோர்களும் வாழ்த்தி பாராட்டினர்.



# சின்னமனூர் நகராட்சி சார்பில் பாரம்பரிய விளையாட்டுடன் சமத்துவ பொங்கல் விழா

தேனி, ஜன.15-

தேனி மாவட்டம் சின்னமனூர் நகராட்சியில் பொங்கல் திருநாளை முன்னிட்டு, நகராட்சி சார்பில் சமத்துவ பொங்கல் விழா நகர் மன்ற தலைவர் அய்யம்மாள் ராமு தலைமையில் நடைபெற்றது. இந்த விழாவில் அனைத்து மதத்தைச் சேர்ந்தவர்களும் ஒன்றாக இணைந்து ஒரே மாதிரியான உடை அணிந்து பொங்கல் வைத்தனர். அதனைத் தொடர்ந்து பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளான கோலப்போட்டி, கயிறு இழுத்தல் போட்டி, இசை நாற்காலி, உறியடித்தல் போன்ற விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. நிகழ்ச்சியின் முடிவில் அனைவரும் ஒன்றாக இணைந்து வைக்கப்பட்ட பொங்கலை கோவிலில் வைத்து சாமி தரிசனம் செய்து அதனை அனைத்து பொது மக்களுக்கும் பிரசாதமாக வழங்கினார்கள்.இந்த நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர்கோபிநாத், நகரமன்ற உறுப்பினர்கள், நகராட்சி ஊழியர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் அனைத்து மதத்தைச் சேர்ந்த பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# தே.சிந்தலைச்சேரி ஊராட்சியில் சமத்துவ பொங்கல் விழா

தேனி, ஜன.15-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஒன்றியத்திற்குட்பட்ட தே.சிந்தலைச்சேரி ஊராட்சியில், சமத்துவ பொங்கல் விழா வட்டார வளர்ச்சி அலுவலர் (கி. ஊ)நிகிலா குமாரி தலைமையில் சிறப்பாக நடைபெற்றது,இந்த பொங்கல் விழாவில் பொதுமக்களுக்கு விளையாட்டு போட்டிகள்நடத்தப்பட்டு இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு பொருட்களும் வழங்கப்பட்டது இதில் ஒன்றிய பொறியாளர் ரஞ்சிதா முன்னிலையில் நடைபெற்றது,உடன் ஊராட்சி செயலர் சிவசங்கர் உட்பட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டு சம்பத்துவ பொங்கல் விழாவினை சிறப்பித்தனர்.




# சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில் தைப்பொங்கல் திருவிழா

தென்காசி, ஜன.15-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் நகராட்சி அலுவலகத்தில், தமிழர் திருநாளாம் தை திருநாளை முன்னிட்டு, நாட்டுப்புற கலைஞர்களுடன் தைப்பொங்கல் திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டது. மேலும், நாட்டுப்புற கலைஞர்களுக்கு நகர மன்ற தலைவியின் கணவர் வெங்கடேசன் பொன்னாடை அணிவித்து வரவேற்றனர்.

# பொங்கல் திருநாள்வாழ்த்து



செங்கரும்பின் சுவையில் திகட்டாத இன்பமும் தித்திக்கும் இனிப்பாக, தைத்திருநாள் பொங்கல் தினத்தை வரவேற்று அனைத்து அரசு ஊழியர்களும், ஆசிரிய பெருமக்களும் மற்றும் நம் தமிழ் மக்களான உறவுகள் அனைவருக்கும் இனிய தைத்திருநாள் நல்வாழ்த்துக்களை தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் மதுரை மாவட்ட தலைவர் அ. இளங்கோ தெரிவித்துள்ளார்.



# தேனி உத்தமபாளையம் பேரூராட்சியில், சமத்துவ பொங்கல் விழா

தேனி, ஜன.15-

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பேரூராட்சியில், தமிழர் திருநாளான தைப்பொங்கல் திருவிழாவை முன்னிட்டு, சமத்துவ பொங்கல் விழா பேரூர் ராட்சி தலைவர் முகமது காசிம் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் இந்து, முஸ்லீம், கிறிஸ்துவ ஆகிய மூன்று மதத்தை சேர்ந்த மத குருமார்கள் சேர்ந்து சமத்துவதை வெளிபடுத்தும் விதமாக சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றன. இவ்விழாவில் செயல் அலுவலர் சின்னச்சாமி பாண்டி, சுகாதார ஆய்வாளர் முருகானந்தம், மற்றும் வார்டு கவுன்சிலர்கள், நகர் நல கமிட்டி நிர்வாகிகள் வர்த்தக சங்க நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொங்கல் திருநாள்வாழ்த்து



இதயம் கனிந்த தமிழ்நாடு அரசு அலுவலக ஒன்றியம் பொங்கல் நல்வாழ்த்துக்கள். தை பிறந்தால் வழிபிறக்கும்! ஒன்றிய அடலேறுகளை ஒன்றிணைந்து இந்த தை திருநாளை மகிழ்ச்சியோடு வரவேற்போம்! மாநில, மாவட்ட , வட்டக்கிளை நிர்வாகிகள், இணைப்புச் சங்க நிர்வாகிகள் - ஒன்றிய உறுப்பினர்கள் , தோழமைச் சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றியத்தின் சார்பில் சமத்துவ தை பொங்கல் உழவர் திருநாள் மற்றும் காணும் பொங்கல் நல் வாழ்த்துக்களை தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய மாநிலத்தலைவர் வெ.மகேந்திரகுமார் தெரிவித்துள்ளார்.



# சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா

தென்காசி, ஜன.15-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் ஸ்ரீ கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில், கிராமிய விளையாட்டுகளின் சங்கமத்துடன் கல்லூரி முதல்வர் பழனிச்செல்வன், நிர்வாக இயக்குனரின் புதல்வன் ராஜேஷ் கண்ணா மற்றும் பள்ளி ஆசிரியர்கள், மாணவ மாணவியர்களுடன் தமிழர் திருநாளாம் தைத்திருநாளை முன்னிட்டு சமத்துவ பொங்கல் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெற்றது.



# இடுக்கி மாவட்டம் நெடுங்கண்டம் உப கல்வி மாவட்டத்திலுள்ள சாஸ்தா நடை அரசு ஆரம்பப் பள்ளியில், சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது

இடுக்கி, ஜன.15-

இடுக்கி மாவட்டம் நெடுங்கண்டம் உப கல்வி மாவட்டத்திலுள்ள சாஸ்தா நடை அரசு ஆரம்பப் பள்ளியில், சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது விழாவிற்கு தலைமையாசிரியர் பாண்டுரெங்கன் தலைமை தாங்கினார். விழாவை உடுபன்சோலை துணை வட்டாச்சியர் ஜெயச் சன் துவக்கி வைத்து பேசினார், மற்றும் வார்டு உறுப்பினா பவானி இன்பராஜ் வாழ்த்துரையாற்றினர் மற்றும் குழந்தைகளின் ஆடல் பாடல் நடைபெற்றது விழாவில் சாரம்மா ஆசிரியை சைலா, சூர்யா சக்திதேவி மணிகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் இறுதியாக ஆசிரியர்முருகன் நன்றி உரையாற்றினார். மாணவ மாணவிகள் உற்சாகமாக பொங்கல் விழாவினை சிறப்பாக கொண்டாடினர்.

# தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்களுக்கு இலவச பட்டா வழங்குவதில் மனம் மகிழ்ச்சி அடைகிறது - அமைச்சர் ஐ.பெரியசாமி பேச்சு

## காந்திபுரம் தூய்மை பணியாளர்களுக்கு விரைவில் புதிய வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் உறுதி



சின்னாளபட்டி, ஜன 15-

ஆத்தூர் ஒன்றியம். சித்தரேவு ஊராட்சிக்குட்பட்ட காந்திபுரத்தில் குடியிருக்கும் 49 தூய்மை பணியாளர்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கும் விழா நடைபெற்றது. திண்டுக்கல் கோட்டாட்சியர் திருமலை தலைமை தாங்கினார். கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், வட்டாட்சியர் முத்துமுருகன், ஒன்றிய செயலாளர் பாறைப்பட்டி ராமன், முன்னாள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி, ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் ஊராட்சிக்குழு தலைவர் பாஸ்கரன் வரவேற்று பேசினார். விழாவில் கலந்து கொண்ட 49 தூய்மைப் பணியாளர்களுக்கு இலவச பட்டா வழங்கிய பின்பு அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள் பேசும்போது இன்று மனதிற்கு மகிழச்சியான நாளாக உள்ளது. நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றிய சந்தோசம் எனக்கு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக தூய்மை பணியாளர்கள், தூய்மை காவலர்களுக்கு நான் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சராக பதவியேற்றபின்பு தமிழக முதல்வரிடம் கோரிக்கை வைத்து, அவர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி மகிழ்ச்சியை ஏற்படுத்தினேன். இன்று 49 தூய்மை பணியாளர்கள் குடியிருக்கும் பகுதிக்கு பட்டா வழங்கியிருப்பது எனக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு இருக்கும் பொதுமக்கள் தங்களுடைய மயானத்திற்கு சாலை வசதி, தெருவிளக்கு, காம்பவுண்டு சுவர், தகன மேடை கேட்டுள்ளார்கள். அவர்கள் கோரிக்கை உடனடியாக நிறைவேற்றி கொடுப்பதோடு, அதற்கான பணிகள் விரைவில் தொடங்கும் என்றார்;. நிகழ்ச்சியில் வட்டார வளர்ச்சி அலுவலர் முருகன், முன்னாள் ஒன்றிய பொறியாளர் முருகபாண்டி, மாவட்ட தகவல்தொழில் நுட்பஅணி ஒருங்கிணைப்பாளர் வாஞ்சிநாதன் சித்தரேவு ஊராட்சி செயலர் கண்ணன், காந்திபுரம் கிளைச் செயலாளர் வேல்முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000